**சுருக்கம்**

திட்டங்கள் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2010–11 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை ரூ.1,70,00,000/- லிருந்து ரூ.1,75,00,000/-ஆக உயர்த்தியும், வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்தும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை

அரசு ஆணை (1டி) எண். 292 நாள்:14.06.2010

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித ந.க.எண். 27429 /09/என்.இ.டி.எம்.3, நாள் 6.5.2010.

* * * * *

ஆணை:

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 14.5.2010 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2010–2011ஆம் ஆண்டு முதல் ரூ.1,70,00,000/- லிருந்து ரூ.1,75,00,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், 2010–2011–ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அனுப்பி அரசின் ஒப்புதலை வேண்டியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து அரசு கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 2010–2011ஆம் ஆண்டு முதல் ரூ.1,70,00,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபது இலட்சம் மட்டும்) லிருந்து ரூ.1,75,00,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) ஆக உயர்த்தப்படுகிறது.

(ii) தற்போது உயர்த்தப்பட்ட ஒதுக்கீடான ரூ.1,75,00,000/–ல் (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) கட்டாயப் பணிகளை மேற்கொள்ள 50 விழுக்காடு நிதியான ரூ.87,50,000/–ஐ (ரூபாய் எண்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வரையறுக்கப்பட்ட

நிதியாகவும், மீதமுள்ள **50** விழுக்காடு நிதியான ரூ.**87,50,000/–**ஐ (ரூபாய் எண்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வரையறுக்கப்படாத நிதியாகவும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(iii) **2010–2011–**ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.

**4.** மேலே பத்தி **3 (i)–**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்:

**(80 % செலவினம்)**

(i) **4515 – 00** – ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு **800** – ஏனைய செலவு பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JF – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல்,
**16.** பெரும்பணிகள் (கு.தொ.கு.4515-00-800-JF-1602)

**(20% செலவினம்)**

(ii) 4515 – 00 – ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 789 – ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் - பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II – மாநிலத் திட்டம் - JB – சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல்.
**16.** பெரும்பணிகள் (கு.தொ.கு.**4515**-00-789 JB 1606)

**5.** நடப்பு நிதியாண்டில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ.**1,70,00,000/-** லிருந்து ரூ.**1,75,00,000/-** ஆக உயர்த்தப்பட்டுள்ளதால், ஏற்பட்டுள்ள பற்றாக்குறையான ரூ.**11,75,00,000/–** (ரூபாய் பதினொறு கோடியே எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) **2010–11–**இன் முதல் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும். இச்செலவினத்திற்கான நிதியொதுக்கீடு **2010–11–**இன் திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தினை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்கண்ட நிதியொதுக்கீட்டினை **2010–11**ன் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளத் தேவையான விளக்கக் குறிப்பு மற்றும் வரவு செலவு திட்டக் கருத்துருக்களை அரசின் நிதித்துறைக்கு உரிய தருணத்தில் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண். 110/DS(B)/Fin (RD)/2010,நாள் 11.06.2010 ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 295 (இருநூற்று தொன்னூற்று ஐந்து)

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15. வழியாக)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை – 108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை – 15.
உறுப்பினர் – செயலாளர், மாநிலத் திட்டக்குழு, சென்னை – 5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை –6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், (தலைமைச் செயலகம்) சென்னை – 9.
சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
சம்பளக்கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 1.
சம்பளக்கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்கள்,
அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகம், சென்னை–9.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு துணைச் செயலாளர், நிதி (வரவு/செலவு) துறை, சென்னை – 9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு திட்டம் பொது–I, பொதுII /ஊ.வ) துறை,
சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**அரசாணை (1டி) எண்.292, ஊ.வ.(ம)ஊ.(மா.அ.தி1) துறை, நாள் 14.6.2010.**

**இணைப்பு**

**2010–11ம் ஆண்டிற்கான சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி **2010–11**ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடான ரூ.1.75 கோடியில், அரசால் அறிவிக்கப்பட்ட முன்னுரிமை பணிகளை கட்டாயமாக எடுத்துச் செய்ய ரூ.87.50 இலட்சத்தினை 'வரையறுக்கப்பட்ட நிதியாக' ஒதுக்கீடு செய்யலாம். மீதமுள்ள 'வரையறுக்கப்படாத நிதியான' ரூ.87.50 இலட்சத்தில், தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்தப் பணிகளையும் தங்கள் விருப்பப்படி சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யலாம்.

**(1) வரையறுக்கப்பட்ட நிதியான ரூ.87.50 இலட்சத்தில் எடுத்துச் செய்ய பரிந்துரைக்கக்கூடிய பணிகள்:**

பெரும்பான்மையான அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையற் கூடங்கள் குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் மற்றும் ஓரளவு ஊரகப் பகுதிகளில் பழுதடைந்த கட்டடங்களில் இயங்குவதால் அவைகளுக்கு படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, **2010–11**ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் (i) ரூ.20 இலட்சத்தை அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் எடுத்துச் செய்யவும், (ii) ரூ.5 இலட்சத்தை மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கிடவும் ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்படுகின்றது. இதன் மூலம் மாநிலம் முழுவதும் மொத்தம் ரூ.58.75 கோடி மதிப்பீட்டிலான மேற்படி பணிகளை மேற்கொள்ள இயலும்.

வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூ.62.50 இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட பணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மொத்த வரம்பான ரூ. 62.50 இலட்சத்தில் எடுத்துச் செய்யலாம்.

**அ) ஊரகப் பகுதிகளில் –**

1. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.
2. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப்பணி மட்டும் மேற்கொள்ளல்).
3. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.
4. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர்

நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு தங்கும் விடுதிகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுத்தல்.

5. ஊனமுற்ற நபர்களுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அனாதை விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்துகொடுத்தல்.

6. பாலங்கள் கட்டுதல்.

7. 2006–07 முதல் 2010–11ம் ஆண்டு வரை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் எடுத்துக் கொள்ளப்படாத குடியிருப்புகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கூடுதலாக இடுகாடு/ சுடுகாடுகள் அமைத்தல்.

8. இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்ட விதிமுறைகளின் அடிப்படையில் புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை மேம்படுத்துதல்.

**ஆ) நகர்ப்புறப் பகுதிகளில்–**

1–6. மேற்குறித்த ஊரகப் பகுதி வரிசை எண்.1–6 உள்ளதைப் போல

7. சுடுகாடு/இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

8. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.

9. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்.

10. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

11. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்கள் வாங்குதல்.

**(2) வரையறுக்கப்படாத நிதியான ரூ.87.50 இலட்சத்தில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகள் –**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட ‘தடை செய்யப்பட்ட பணிகளைத்’ தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்படாத நிதியின்கீழ் எடுத்துச் செய்யலாம் . அதேபோல் வரையறுக்கப்பட்ட நிதியில் எடுத்துச் செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத நிதியில் மேற்கொள்ளலாம்.

**(3) தடை செய்யப்பட்ட பணிகள் –**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறப்பினமாக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் ‘தடை செய்யப்பட்ட பணிகளை’ எடுத்து செய்ய இயலாது.

1. மத்திய மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

**விதிவிலக்கு –** (i) பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுதல், நேரடிக் கொள் முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள், (ii) தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர் மற்றும் சிமென்ட் கான்கிரீட் தளம் அமைத்தல்.

2. அனைத்து வகையான பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு –** அரசுத் திட்டங்களின்கீழ் 31.12.2000 வரை கட்டப்பட்ட வீடுகளை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகள் உட்பட, ஒரு வீட்டிற்கு ரூ.15,000/–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்படவேண்டும்.

3. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

**விதிவிலக்கு –** (i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்,
(ii) அரசு போக்குவரத்து கழகங்களுக்கு சொந்தமான கழிவு செய்யப்பட்ட பேருந்துகளுக்கு (அரசாணை (நிலை) எண்.2552, போக்குவரத்துத் துறை, நாள் 26.9.91–இல் குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி கழிவு செய்யப்பட்ட பேருந்துகள்) பதிலாக மட்டும் புதிய சாதாரண வகை பேருந்துகள் வாங்குதல்,
(iii) அரசு போக்குவரத்து கழகங்களின் பணிமனைகளுக்கு பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல்,
(iv) மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

இருப்பினும், இதில் மனித ஆற்றலுக்காக (manpower) கூடுதல் செலவினம் எதுவும் மேற்கொள்ளக் கூடாது.

4. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு –** 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ் வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்தல். பகுதி சுய நிதி பெறும்

மற்றும் பகுதி நிதி உதவிப் பள்ளி அல்லது பகுதி தமிழ்வழிக் கல்வி அல்லது பகுதி ஆங்கிலவழிக் கல்வி பள்ளிகள் இத்திட்டத்தில் அரசு நிதி உதவி பெற தகுதியில்லை. நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்றுக்கு இத்திட்டத்தில் அரசு நிதிஉதவி ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ரூ. 15 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்று இத்திட்டத்தில் எவ்வளவு நிதி உதவி பெற்றிருப்பினும், அப்பள்ளி இத்திட்டத்தின் கீழ் மூன்றாண்டுகளுக்கு மேலும் உதவி பெற தகுதியில்லை.

மேற்படிப் பணிகளைப் பொருத்தமட்டில், மாவட்ட ஆட்சியர் தனது சொந்த விசாரணையை மேற்கொள்ளுவதோடு, சம்பந்தப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கீழ்க்காணும் சான்றிதழ்களை பணி மேற்கொள்வதற்கு முன் பெறப்பட வேண்டும்.

(1) இந்தப் பள்ளி 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் வகுப்புகள்/ பிரிவுகள் கொண்டது.

(2) இந்தப் பள்ளி 100 சதவீதம் அரசு உதவி பெறும் பள்ளி ஆகும். அதே நிர்வாகத்தால் ஒரே வளாகத்திலோ அல்லது வெவ்வேறு வளாகங்களிலோ நடத்தப்படும் இந்தப் பள்ளியில் சுய நிதி பிரிவுகள் / வகுப்புகள் இயங்கவில்லை.

2. தனிநபர்/ குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.
**விதிவிலக்கு –** கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிமுறைகளின்படி புதிய தொகுப்பு வீடுகள் கட்டுதல் மற்றும் கூரை வீடுகளை மேம்படுத்துதல்.

3. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.

4. மானியம் மற்றும் கடன், மத்திய மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

5. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

6. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

7. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

8. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

9. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.

10. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

11. உயர் கம்ப மின் விளக்குகள் பொருத்துதல்.

**(4)** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் **19** சதவீதம் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி அல்லது நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் (slums) வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

**(5)** தேவையின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருடன் கலந்தாலோசனை செய்து, மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்களை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர்